# தேவகோட்டை நகராட்சி.
## அவசரக்கூட்டம்.

தேவகோட்டை நகராட்சி நகர்மன்ற 21.10.2022ம், தேதி வெள்ளிக்கிழமை மாலை 05.00 மணிக்கு அவசரக்கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்க்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. தாங்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**(ஒப்பம்) கா.சுந்தரலிங்கம்**
**நகர்மன்ற தலைவர்,**
**தேவகோட்டை நகர்மன்றம்.**

**பொருள்–132**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் விதிகள் 2022ன்படி வார்டு குழு மற்றும் பகுதி சபா குழுக்கள் அமைத்தல் தொடர்பாக தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 303–ன் கீழ் உருவாக்கப்பட்டு அரசாணை (நிலை) எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 24.06.2022 மற்றும் மேற்கூறிய குழுக்களுக்கு செயலாளர்கள் தேர்ந்தெடுத்தல் மற்றும் அவர்களின் பொறுப்புகள் மற்றும் பணிகள் குறித்த அரசாணை (நிலை) எண் 93 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 24.06.2022 மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

அரசாணை (நிலை) எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 24.06.2022 ன்படி வார்டு கமிட்டி குழு அமைத்தல் (Committe ) மற்றும் பகுதி சபா குழு அமைத்தல் தொடர்பாக ஒவ்வொரு வார்டு மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களை தலைவராக கொண்டு வார்டு குழு அமைத்தல் மற்றும் பகுதி சபா குழு உறுப்பினராக வார்டு உறுப்பினர்களை தேர்ந்தெடுத்து குழு அமைப்பதற்கு ஒவ்வொரு வார்டிலும் உள்ள தெருக்கள் வாரியாக நான்கு பகுதி சபா அமைத்து அரசாணையின்படி மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

அரசாணையின் படி பகுதி சபா குழு உறுப்பினராக நியமனம் செய்யப்படும் நபர்களிடமிருந்து படிவம் 1ல் மேற்படி நபர்களின் விருபத்தினை பெறுவதற்கும், மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 132 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்–133**

அரசாணை நிலை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 24.06.2022 படி தேவகோட்டை நகராட்சி பகுதியில் ஒரு வார்டிற்கு நான்கு பகுதி சபா உறுப்பினர் வீதம் 27 வார்டுகளுக்கு நியமனம் செய்ய பகுதி சபா உறுப்பினர்கள் பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

பகுதி சபா உறுப்பினர்கள் பட்டியல் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 133 – அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள்–134</u>

அரசாணை நிலை எண்.92 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 24.06.2022 ன்படி மற்றும் அரசாணை (நிலை) எண் 93 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 24.06.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண்.24470/2022/MA2 நாள் 08.08.2022ன்படி வார்டு குழு அமைத்தல் (Committe) மற்றும் பகுதி சபா குழு அமைத்தல் தொடர்பாக ஒவ்வொரு வார்டு மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களை தலைவராகக்கொண்டு வார்டு குழு அமைத்தல் மற்றும் பகுதி சபா குழு உறுப்பினாராக வார்டு உறுப்பினர்களை தேர்ந்தெடுத்து குழு அமைப்பதற்கு ஒவ்வொரு வார்டிலும் உள்ள தெருக்கள் வாரியாக நான்கு பகுதி சபா அமைத்து அரசாணையின்படி மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய ஆகும் செலவினத்திற்கும் மேலும் மேற்படி வார்டு குழு உறுப்பினர் மற்றும் பகுதி சபா உறுப்பினர்களை தேர்த்தெடுக்காகும் உத்தேச செலவினத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இதற்கு உத்தேச செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 134 – அனுமதிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) கா.சுந்தரலிங்கம்**
**நகர்மன்ற தலைவர்,**
**தேவகோட்டை நகராட்சி.**